# இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதில் அரசியல் செய்யாதீர்!

# த.வெ.க. அரசு பரந்தூர் விமான நிலையத்தை கைவிட்ட தினம் - தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு கருப்பு நாள்!

## முன்னாள் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!

**சென்னை, ஆக. 26-**

**தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்று கருப்பு நாள் என்றும் கோடிக்கணக்கான இளைஞர்கள், பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய திட்டத்தில் அரசியல் செய்யாதீர்கள் என்றும் பரந்தூர்தான் least impact இடம் என்பதால் தான் தேர்வு. முதல்வர் விஜயின் EGO விற்காக திட்டம் ரத்து என்றும் இது குறித்து முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அளித்த பேட்டி வருமாறு:**

world level-ல one of the best airports-ஆக பரந்தூர் வந்திருக்கும் என்றும் முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டும் என்பதில் எங்களது கழகத் தலைவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும் தொடர்ந்து முனைப்பாக இருந்து வருகிறது. இந்த வளர்ச்சி உறுதி செய்யப்பட வேண்டும் என்றால், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து இதே அற்புதமான உச்சியை நோக்கி ஒவ்வொரு ஆண்டும் செலுத்தப்பட வேண்டும்.

**இந்தியாவில் எந்த மாநிலமும் காணாத தொழில் வளர்ச்சி!**

அதற்கு உட்கட்டமைப்பு மிக மிக அவசியம். ரொம்பக் குறிப்பாக சொல்லணும்னா, infrastructure-ல் connectivity is very key; industrial growth இதுவரை தமிழ்நாடு காணாத ஒரு தொழில் வளர்ச்சியை, இந்தியாவில் எந்த மாநிலமும் காணாத ஒரு தொழில் வளர்ச்சியை கடந்த ஐந்து ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு கண்டது. இந்தியா வியந்து பார்த்தது. "நம்பர் ஒன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்" என்று இந்தியாவே வியந்து பார்த்தது.

தமிழ்நாடு எப்படி இந்த வளர்ச்சி எல்லாம் கொடுத்தது என்று நம்மிடம் கற்றுக்கொண்டு, மற்ற மாநிலங்கள் எல்லாம் அதை செயல்படுத்தத் துவங்கினார்கள். அதற்குக் காரணம் துரிதமான திட்டமிடல், சரியான திட்டமிடல், துரிதமான clearance எல்லாமே. அதைத் தாண்டி infrastructure-ல் roads, ports, connectivity எல்லாமே ரொம்ப சரியான நேரத்தில் முடிவெடுக்கப்பட்டு, திட்டங்கள் வகுக்கப்பட்டன.

அதில் முக்கியமான ஒரு திட்டம் வந்து port connectivity. வந்து எல்லாருக்கும் நல்லா தெரியும். துறைமுகங்கள், அதே போல நம்ம கப்பல் போக்குவரத்தும் சரி, விமானப் போக்குவரத்தும் சரி, தரைவழிப் போக்குவரத்தும் சரி, அனைத்தும் சரியாக இருந்தால்தான் தயாரிக்கப்படும் இந்த products எல்லாமே சரியான நேரத்தில், உரிய நேரத்தில் ports சென்றடையும்; உலகம் எங்கும் அது சென்றடையும். அந்த infrastructure ரொம்பச் சரியாக இருக்கணும் என்பதில் திராவிட நாயகன் அவர்கள் ரொம்பத் தெளிவாக இருந்தார்.

**மிகப்பெரிய கருப்பு நாள்!**

இதில் முக்கியமாக இன்னைக்கு நம்ம பார்க்கறதுன்னா, இன்னைக்கு வந்து தமிழ்நாட்டுக்கு ஒரு மிகப்பெரிய கருப்பு நாள் என்றுதான் நாம் சொல்ல வேண்டும். தொழில் வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பு வசதிகளிலும் ஒரு மிகப்பெரிய பின்னடைவை சந்தித்த நாள் இன்று, 24 ஆகஸ்ட் 2026 என்று வரலாறு சொல்லும் அளவிற்கு, நீண்ட காலம், மிகச் சரியான முறையில் பல இடங்களைப் பார்த்து, பொருளாதார வல்லுனர்கள், தொழில்நுட்ப வல்லுனர்களிடம் கேட்டு, பிறகு தேர்வு செய்யப்பட்ட பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை இன்று த.வெ.க அரசு டிராப் செய்துள்ளது; கைவிட்டுள்ளது.

இது ஒரு விமான நிலையத்தை மட்டும் கைவிட்ட மாதிரி எனக்குத் தெரியல. ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வளர்ச்சியே- தொழில் வளர்ச்சி மட்டும் சொல்லல-ஒட்டுமொத்த வளர்ச்சி, infact, tourism-க்கும், சுற்றுலாத்துறைக்கும் ஒரு மிகப்பெரிய அடி.

இதைத் தாண்டி பல விஷயங்களை சொல்லிட்டுப் போகலாம். அப்படிப்பட்ட ஒரு முடிவை இன்று இந்த அரசாங்கம் எடுத்திருந்தது. உண்மையாகவே சொல்றேன், நாங்களெல்லாம் வந்து ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து இந்தத் திட்டத்தில் வேலை செஞ்சிருக்கோம். எனக்கு அதோட வழி எனக்கு நல்லாவே தெரியும். எவ்வளவு தூரம், எவ்வளவு clearances, அதுவும் அப்ப இருந்த, இப்பவும் இருக்கிற அந்த ஒன்றிய அரசு இருந்து இந்தத் திட்டத்துக்கான permissions எல்லாம் வாங்குறதுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டோம்னு எங்களுக்கெல்லாம் நல்லா தெரியும்.

ஒரு திட்டத்தைக் கொண்டு வருவது எவ்வளவு கடினம் என்பது அரசு இயந்திரத்தில் பணிபுரிந்தவர்களுக்கு, ஏன் படித்த இளைஞர்கள் அனைவருக்கும் நன்றாகப் புரியும். ஏன், உங்களுக்கு, குறிப்பாக ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் ரொம்ப நல்லா தெரியும். திட்டத்தைக் கொண்டு வருவது சாதாரண விஷயம் இல்ல.

இப்படிப்பட்ட ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திட்டம் இந்தத் திட்டம். இந்தத் திட்டம் ஏன் தேவை?

முதலில் சென்னை மீனம்பாக்கம் ஏர்போர்ட்டில் இன்னைக்கு capacity ஆண்டுக்கு 35 million. ஒரு வருடத்திற்கு 35 million, கிட்டத்தட்ட 3.5 கோடி. passengers போகும் அளவுக்கு தான் இருக்கு. இதில் இன்னைக்கு நம்ம முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல, அது 20 million extra-வா வரப்போகுது, T5-ல் இருந்து terminal 5-ல் இருந்து வரப்போகுதுன்னெல்லாம் சொல்றார்.

**மு.க. ஸ்டாலின் தொலைநோக்குச் சிந்தனை!**

ஆனா தமிழ்நாடு நாங்க one trillion dollar economy-யை நோக்கி தமிழ்நாட்டை செலுத்திக் கொண்டிருந்த திராவிட நாயகன் அவர்கள், நமது முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தொலைநோக்குச் சிந்தனையுடன் 2045, 2050 என்று நமது திட்டமிடல் இருந்தது. புதுசா ஒரு airport வந்துச்சுன்னா குறைந்தபட்சம் 20 ஆண்டுகளுக்கு அது போதுமானதாக இருக்க வேண்டும்.

இப்ப நீங்க இப்ப சொல்றீங்க 35 million. இந்த 35 million, அதாவது 3.5 கோடி, அந்த இலக்கு சென்னை விமான நிலையம் 2028-லேயே முடிஞ்சிரும். 28-ல capacity முடிஞ்சிரும். ஏற்கனவே இருக்கிற capacity-க்கு மீனம்பாக்கத்தில் உள்ள airport-ஐ தொடர்ந்து use பண்றவங்க யாராக இருந்தாலும், தொழில்துறையைச் சார்ந்தவங்க யாராக இருந்தாலும் சொல்லுவாங்க. நீங்க தொடர்ந்து சமூக வலைதளங்களைப் பார்த்துட்டே இருப்பீங்க. அவ்வளவு complaint வந்துட்டே இருக்கும்.

அது Airports Authority of India நடத்துற ஒரு விமான நிலையம். நம்முடையது கிடையாது. நம்ம அரசாங்கத்துக்கு இது கிடையாது. நமக்கு அங்கு பெரிய ஒரு control-ஏ கிடையாது. ஆனால் பரந்தூரில் புதிய விமான நிலையம் வந்திருந்தால், அது முழுமையாக நமது control-ல் இருந்திருக்கும். அது நமது சொத்து. ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசின் சொத்தாக இருந்திருக்கும்.

அங்கே இருந்து ஒரு PPP model-ல் நம்ம ஒரு partner-ஓட சேர்ந்து, நம்ம Tata போன்ற மிகப்பெரிய நிறுவனங்களோட சேர்ந்து, இல்ல, ஏன் இன்னும் international Singapore Airports interested-ஆ இருந்தாங்க. அதேபோல Amsterdam Airport மாதிரி பல airports-லாம் பெரிய பெரிய airports-ல இருந்தே அவங்களே interested-ஆ இருந்தாங்க. முதல் கட்ட பேச்சுவார்த்தையில் எல்லாம் அப்படிப் பட்ட அவங்களே interest சொல்றாங்க. "சென்னைக்கு ஒரு airport வருதா? நாங்களே கூட participate பண்ணுவோமே"ன்ற மாதிரி எல்லாருமே கேட்டாங்க.

குறிப்பாக திராவிட நாயகன் அவர்கள், நமது முதலமைச்சர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு எல்லாம் செல்லும்பொழுது ரொம்ப உன்னிப்பாக எல்லாரும் கவனிச்சு, "உங்க airport expansion, connectivity எப்படி வரப்போகுது?" ஏன்னா சென்னை airport மூன்றாவது best airport-ஆ இருந்துச்சு இந்தியாவில்.

சமீபத்தில் கொஞ்ச நாளுக்கு முன்னாடி, இன்னைக்கு எங்க இருக்கும்? ரொம்ப ஐந்தாவது இடத்தில் இருக்கும். Delhi, அதுக்கப்புறம் Mumbai, அதுக்கப்புறம் Bangalore, அதுக்கப்புறம் Hyderabad.

Bangalore, Hyderabad-லெல்லாம் சென்னைக்கு வந்து flight எடுத்துட்டுப் போயிட்டு இருந்தாங்க. South India-வோட gateway-ஆ சென்னை இருந்துச்சு. ஆனா இப்ப நாம Hyderabad-க்கும் Bangalore-க்கும் போய் flight எடுக்க வேண்டியதா இருந்துச்சு.

அதைத்தான் நம்ம முதலமைச்சர், ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்கள் இங்கே ஏப்ரல் மாதத்தில் இதே தமிழ்நாட்டுக்கு வந்து அவர் பேசும்போது கூட ஒன்று சொல்லியிருக்கார்.

"சென்னை airport எப்படி இருக்க வேண்டும்? Hyderabad நான் வந்து இருக்கும்போது அவ்வளவு பெருசாகப் பண்ணினேன். என்னைப் பார்த்து Bangalore பண்ணுச்சு. Bangalore இன்னைக்கு அவ்வளவு பெருசாக வந்துடுச்சே. ஆனால் சென்னை ஏன் இன்னும் இப்படி இருக்கு?" அப்படின்னு அவர் கேக்குறார்.

அப்ப, அந்த அளவுக்கு அண்டை மாநிலத்து முதலமைச்சருக்கு இருக்கும் அந்த அக்கறைகூட இன்று இருப்பவர்களுக்கு இல்லை என்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. ஒரு வார்த்தை சொல்லி விட்டோம் என்பதற்காக நீங்கள் இன்று "டிராப் செய்றேன்"னு சொல்றீங்க.



இன்னைக்கு முதலமைச்சர் கொடுத்த அறிக்கையிலேயே நான் வந்து அங்கே போயிருந்தேன், போராட்டக் குழுவை சந்தித்தேன், அவர்கிட்ட நான் உறுதி அளித்தேன், நான் வந்துட்டேன்னு சொல்றாங்க. நீங்க ஒரு வாட்டி போனீங்க. ஒரு வாட்டி பார்த்தீங்க, பேசினீங்க. சரி. அதுல முடிவு பண்ணிட்டேன்னு எப்படி உங்களால சொல்ல முடியும்னு எனக்குத் தெரியல.

**மக்களிடம் பேச்சுவார்த்தை!**

தொடர்ந்து இன்னைக்கு காலை, இன்று காலை நமது முன்னாள் அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் சொல்லியது போல, அண்ணன் எ.வ.வேலு அவர்களும், தங்கம் தென்னரசு அவர்களும், தா.மோ. அன்பரசன் அவர்களும் தொடர்ந்து அத்தனை முறை அங்கே அந்த மக்கள்கிட்ட பேச்சுவார்த்தை நடத்தி இருக்காங்க.

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, சரியான அங்கே அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கப்பட்டு, தேவையான வீடுகளும் வாங்கி இருக்கோம். பல இடங்களில் அதற்கு மாதிரி வீடுகளும் கட்டிக் காட்டியாச்சு.

ஒட்டுமொத்த village-ஐயே recreate பண்றோம். அப்படி இவ்வளவு இவ்வளவு கஷ்டப்பட்டு திட்டமிடல் ஏன்?

இது அங்கதான் பண்ணனும்ன்றது எங்களுக்கு என்ன தேவை? ஏன்னா பல இடத்தை பார்த்தாச்சு. சென்னைன்னு பார்த்தீங்கன்னா, அந்தப் பக்கம் full-ஆ கடல்தான். அவ்வளவுதான். அதற்குப் பிறகு நீங்க ஒன்றும் பண்ண முடியாது. இங்க போனீங்கன்னா Pulicat Lake, கீழ போனீங்கன்னா நம்ம நம்ம வேதந்தாங்கல் பறவைகள் சரணாலயம். அதுக்கப்புறம் நடுவில அனல் மின்நிலையம்.

ஒரு சாதாரண Google Map எடுத்துப் பாருங்க. Google Map-ல satellite view-ல் போட்டு சென்னை சுற்றி நீங்க ஒரு ஐந்து, ஆறு ஆயிரம் ஏக்கர் எடுக்கணும்னா, நீர்நிலைகள் இல்லாமல் நீங்க எடுக்க முடியுமா?

**நீர்நிலைகளை எடுக்க முடியுமா?**

வேற இடம் எடுக்கறேன்னு சொல்றாரே, இன்னைக்கு நீர்நிலைகள் எல்லாம் எடுக்க முடியுமா? இவர் புதுசா எடுக்கப் போற அந்த இடத்தில் எந்த ஒரு சுற்றுச்சூழல் பாதிப்பும் இல்லாமல் இருந்துவிடுமா?

இவ்வளவு நாங்க பார்க்காமல்தான் ஒரு பொறுப்புள்ள அரசாங்கம், இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சர் என்று பெயர் எடுத்திருக்கும் ஒரு முதலமைச்சர், எங்களது முன்னாள் முதலமைச்சர் அவர்கள், அவர் செய்த பணியை நீங்க உங்க அதிகாரிகள்கூட கேட்டு இதை முடிவு செய்ய மாட்டீங்க?

அதிகாரிகள் இது ஒத்துக்கொண்டார்கள் என்றால் உண்மையாவே என்னால் நம்பவே முடியல. ஏன்னா அத்தனை discussion போச்சு. தொடர்ந்து பலமுறை இந்த discussion திரும்பத் திரும்பத் இந்த இடத்தைத் தேர்வு செய்ய discussion போயிருக்கு. அதற்குப் பிறகு தான் தேர்வு செய்யப்பட்டுச்சு. அதற்குப் பிறகு எல்லா application-ம் ஒன்றிய அரசுக்கு போட்டு, அப்படி நமக்கு எதிராக இருந்த ஒரு ஒன்றிய அரசிடம் இருந்து அந்த permission-களெல்லாம் கஷ்டப்பட்டு வாங்கிய பிறகுதான் பரந்தூர் உறுதி செய்யப்பட்டது.

35 million இப்ப உங்களோட சென்னை விமான நிலையத்தோட capacity. 55 million-ஆகப் போகுது. 55 வந்த பிறகுன்னு சொல்றீங்க. பரந்தூர் மட்டுமே 100 million, ஒரு 10 கோடி பேருக்கான capacity-ல் உருவாக்கப்பட்டது.

**மீனம்பாக்கம் விமான நிலையம் கெப்பாசிட்டி போதாது!**

இப்ப இருக்கிற இந்த சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் 2034-க்கு மேல நமக்கு capacity போதாது. சராசரியான வளர்ச்சியில போனாலே இந்த இடம் பத்தாது நமக்கு. இப்பவே நம்மளுக்கு இந்த airport பத்தலன்னு பல பேர் சொல்லுவாங்க.

கொஞ்ச நாள் கழிச்சு இன்னொரு entrance ஒன்று கேட்கிறாங்க. அந்த entrance-க்கு நிலம் எடுப்பு நீங்க எப்படி எடுப்பீங்கன்னு நாங்க பார்க்கிறோம். நீங்க எவ்வளவு செலவு பண்ணப் போறீங்க, நீங்க பாருங்க. அதெல்லாம் யோசிச்சிருக்கீங்களான்னு எனக்குத் தெரியல. இதெல்லாம் யோசித்து, சிந்தித்து செயல்பட்ட அரசுதான் திராவிட மாடல் அரசு.

நீங்க புது airport-ஐ நாம இப்போ இந்த speed-ல போயிட்டு, இப்ப இருக்கிற பரந்தூர் முடிச்சாலே, work ஆரம்பிச்சாலே மூணு வருஷம் ஆகும் கட்டறதுக்கு. 2029, 2030 ஆயிடும்.

2030-ல இருந்து 100 million மீனம்பாக்கம் extension சேர்த்து 155 million . இது நம்ம capacity-யை 2050-ல இருந்து 52க்குள் எட்டிடும். அப்ப எவ்வளவு சார் இருக்கு? 30-ல இருந்து 52 வருஷத்துக்குள்ள புதிய ஏற்பாடு ஒன்று தேவைப்படும். இந்த திட்டமிடல்கூட இல்லனா எப்படி? 20 வருஷம் கூட ஒரு advance-ஆ நீங்க யோசிக்க மாட்டீங்களா?

உண்மையாவே ரொம்ப வருத்தமா இருக்கு. இதுல வந்து தொழில் வளர்ச்சியில, பொருளாதாரத்தில, தொழில் துறையில அரசியல் நிச்சயமா கூடாதுன்னு இன்னைக்கு இல்லைங்க. நாங்க ஆட்சியில இருக்கும்போது நான் தொடர்ந்து சொல்லியிருக்கேன்.

பல லட்சம் பேருக்கு, கோடிக்கணக்கான மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு, பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கக்கூடிய இந்தத் துறையில் உங்கள் அரசியலைப் புகுத்தாதீர்கள்.

நீங்கள் இன்று அரசியல் செய்ய நினைத்து, இன்று தமிழ்நாட்டுக்கு மிகப் பெரிய மிகப்பெரிய கேடை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறீர்கள்.

தயவு செய்து இதை reconsider பண்ணணும். நான் நீங்க "டிராப் பண்றேன்"னு சொல்றீங்க சார். 90% நிலம் எடுப்பு முடிச்சாச்சு. இப்ப எடுத்த நிலத்தை என்ன பண்ணீங்க? திருப்பிக் குடுத்துருவீங்களா எல்லாருக்குமே? இந்த நிலத்த வேற விஷயத்துக்கு use பண்ண முடியாது. Land Acquisition Act என்ன சொல்லுது? எந்தத் திட்டத்தை எந்த விஷயத்துக்காக எடுத்துக்கணும், அதுக்காக use பண்ணலன்னா திருப்பிக் கொடுத்துரணும். ரைட்டா?

சரி, நீங்க அதுக்கு வேற ஏதாவது திட்டங்கள் வச்சிருந்தா கூட, அந்தத் திட்டங்கள் என்ன திட்டங்கள்? அந்தத் திட்டங்கள் வரும்போது இதே மாதிரி சுற்றுச்சூழல் பாதிப்பு வராதா? சரி, பெரிய data center-லெல்லாம் அங்கே கொண்டு போய் போடுறேன்னு சொல்றாங்க. சரி, அந்த data center-க்கு எது முக்கியமா தேவை? தண்ணி. எவ்வளவு தண்ணி தேவை? இவங்க இன்னைக்கு, இன்னைக்கு ஒரு சொட்டு தண்ணி நாங்க பரந்தூர்ல வீணடிக்கல.

பரந்தூர்ல எவ்வளவு இடம் தண்ணீர் இருக்கிற இடம், water spread எடுக்கிறோமோ, அவ்வளவு water create பண்ணி... நீங்க அந்தப் படத்திலேயே பார்த்தீங்கன்னா, south-west ஒரு பெரிய ஒரு நீர்நிலை உருவாக்கி இருக்கோம். கூட இருக்கு அந்த வரைபடத்திலேயே.

எவ்வளவு நீர்நிலை எடுக்கிறோமோ, அவ்வளவு நீர்நிலை உருவாக்கம் திட்டமிடல் அவ்வளவு அற்புதமா நடந்ததால் தான் environment-ல இருந்து ஒன்றிய அரசு clearance கிடைச்சது.

அப்ப இன்னைக்கு வந்து, "இல்ல, அத நான் வேற திட்டம் கொண்டு வரேனா?" அதுல என்ன பண்ணப் போறீங்க? முதல்ல இப்படி கொண்டு வரலாமா? இதுல சட்டத்துல விதி இருக்கா? அதெல்லாம் உங்களுக்கெல்லாம் பேசி பார்த்தீங்களா?

இன்னைக்கு மீனம்பாக்கம், இந்த 2034க்குள் முடியப் போகுது. எது நீங்க சொல்ற 55 million capacity, இப்ப ஒன்றிய அரசு அவ்வளவு சீக்கிரம் நமக்கு நிதி ஒதுக்கி, அவ்வளவு சீக்கிரம் T5 முடிச்சு கொடுத்தாலுமே 2034 முடியுமே. அப்ப என்ன பண்ணப் போறீங்க? இதெல்லாம் நீங்க சிந்திச்சிருக்கீங்களா இல்லையா?

**பரந்தூரைக் கைவிட்டது தவறான செயல்!**

இப்படி சிந்தனையே இல்லாம, தொலைநோக்குப் பார்வை இல்லாம பரந்தூரைக் கைவிட்டது மிக மிக மிக தவறான ஒரு செயல். இதற்கு தமிழ்நாடு மக்கள் நிச்சயமாக எதிர்காலத்தில் உங்கள் மீது மிகப்பெரிய ஒரு பழியை நீங்களே சுமத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

இது பெரிய தவறு. இதை கைவிடாமல், நாட்டுக்கும் மக்களுக்கும், தொழில் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சிக்கும் நன்று நிச்சயமாக reconsider பண்ணணும் முதலமைச்சர் அவர்கள்.

இந்த இடம் least impact இடம். இது வரைக்கும் நாங்க select பண்ண இந்த இடத்துல, வேற எங்க போனாலும் அதிகமான மக்கள் மேல impact-ஆ இருக்கும். வேற வழி இல்லாம யார் மேலும் impact இருக்கக்கூடாதுன்னா சார், எந்த அரசாங்கம் இருந்தாலும் அதைத்தான் நினைக்கும். சென்னைக்கு நடுவுல ரெண்டு parallel runway. இப்ப மீனம்பாக்கத்துல இருக்கறது இப்படி cross runway. இந்த cross runway இருந்துச்சுனாலேயே அதை வந்து ஒரு runway-தான் consider பண்ணுவாங்க.

நீங்க, in fact, இன்னும் future-ல இப்ப இருக்கற aircraft-களாம் wingspan-ல about 80, 60, 65, 70 மட்டும்தான் வரும். 80 மீட்டர் வரும்போது, இனிமே future-ல long distance-லாம் வரும்ன்றதுக்காக அதை select பண்ணி, அதுவரைக்குமே runway design பண்ணுவோம். சார், பார்த்துப் பார்த்துச் செஞ்சிருக்கோம் சார். International, world level-ல one of the best airports-ஆ பரந்தூர் வந்திருக்கும் சார். இது மிகப்பெரிய... இதெல்லாம் எவ்வளவு தூரம் நாங்களெல்லாம் அவ்வளவு தூரம் உழைச்சிருக்கோம் சார்.

**தமிழ்நாடு அரசாங்கத்துக்கு வருமானம் வரும்!**

பரந்தூர் airport-ஐ பொறுத்தவரைக்கும், ஒவ்வொரு passenger அங்கே பறக்கும் போதும் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு வருமானம். தமிழ்நாடு அரசாங்கத்துக்கு வருமானம் வரும் சார். அந்த airport-ஐ use பண்ற passengers கொடுப்பாங்க. அது நம்மளுக்கு வருமானமா வரும். நம்ம அரசாங்கத்துக்கு வருமானமா வந்திருக்கும். இப்ப AAI க்கு கொடுத்து என்ன வருமானம் உங்களுக்கு வரப்போகுது?

இது நம்ம இந்தியாவின் நம்பர் ஒன் பொருளாதாரம். 13-something-ல் வளர்ந்துட்டு இருக்கோம். அப்படிப்பட்ட தமிழ்நாட்டுக்கு one trillion dollar-ஐ நாங்க சொன்னோம். இப்ப அவர், "நாங்க one trillion சொன்னதுக்காக நீங்க ஒன்றரை ட்ரில்லியன் சொல்றீங்க" சொல்லுங்க.

உங்களுக்கு connectivity இல்லாம? எப்படி சார் வரும் ஒன்றரை ட்ரில்லியன் ? Direct connectivity சார். ரெண்டு parallel runway, 4000 metres இல்லாம, Code of aircrafts இல்லாம, large aircrafts இல்லாம, passenger ஒரு ஒரு மணி நேரத்துக்கும் 15,000 பேர் வந்துட்டுப் போகணும் சார்.

சென்னை Asia-வோட Silicon Valley-ஆ மாறி, இங்க இருந்து அங்க இருக்கிற Silicon Valley-யோட connect பண்ண வேண்டாமா? நம்ம ஆளு தானே சார் அங்க இருக்காங்க. Direct flight இங்க இருக்கணும். Bangalore போய் எதுக்கு எடுக்கணும்?

41% எலக்ட்ரானிக்ஸ் இந்தியாவோட எக்ஸ்போர்ட்ஸ் நம்ம சென்னையில இருந்து போகுது சார். இது இப்ப, இந்த இந்த எக்ஸ்போர்ட் இவங்கல்லாம் இப்பவே அவங்க வந்து பெங்களூர்ல வந்துட்டு இருக்காங்க. பெங்களூர்ல இருந்து, யுஎஸ்ல இருந்து பெங்களூர் வந்து, யுஎஸ்ல இருந்து ஹைதராபாத் வந்து இங்க வந்துட்டு இருக்காங்க. அவங்கிட்ட சீக்கிரமா நீங்க நேர்ல வந்துரலாம். சீக்கிரம் நேர்ல வந்து பேசி நாங்க கூட்டிட்டு வந்துருக்கோம். இப்ப இன்னைக்கு இல்லடா, இது இப்பத்தைக்கு வரப்போறது இல்ல அப்படின்னா, கனெக்டிவிட்டியே இல்லாத ஊருக்கு எப்படி வருவாங்க?

நீங்க ஒரு ஊருக்கு பொண்ணு கொடுக்கப் போனீங்கன்னா கூட கிராமத்துல சொல்லுவாங்க, "அந்த ஊருக்கு பஸ்ஸே இல்லடா"ன்னுவாங்க. கேட்டீங்களா, இல்லையா? இது கிராமப்புறத்துல ஒரு ஊருக்கு ஊருக்கு போறதுல பொண்ணு கொடுக்கறதுக்கு வந்து பஸ்ஸே இல்லன்னு சொல்ற மாதிரிதான். இது வந்து ஏர் பஸ்ஸே இல்லடா அப்படின்ற மாதிரிதான். இந்த ஊருக்கு வந்து தொழில் துறையில, அந்த டெர்மினால ஜில நீங்க சொல்லணும்னா, பஸ்ஸே இல்லன்னு சொல்ற, ஏர் பஸ்ஸே இல்லடா அப்படின்னு சொல்லுவாங்க.

நாங்க அஞ்சு வருஷம் கஷ்டப்பட்டு அந்த இடத்தை கொண்டு வந்து வச்சு, திருப்பி அந்த இடத்துல இவ்வளவு கிளியரன்ஸ் வாங்கி, மக்களிடம் மூணு அமைச்சர்களை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தி, அவங்களுக்கு இவ்வளவு திட்டங்களை கொடுத்து, வீடு கட்டிக் கொடுத்து, இடத்தை கொடுத்து, வீடு கொடுத்து, அதை கட்டியும் கொடுத்து, வீடு மட்டும் இல்ல, பள்ளிக்கூடம், அதுக்கு தேவையான ஹாஸ்பிட்டல் எல்லாம், கிராமத்தையும் ரீகிரியேட் பண்ணிருக்கோம் சார். ஒட்டுமொத்த கிராமத்தையும் ரீகிரியேட் பண்ணிருக்கோம். அதைத் தவிர காம்பன்சேஷன் கொடுத்திருக்கோம். அதைத் தவிர வேலைவாய்ப்பு கொடுக்கப் போறோம்.

**தமிழ்நாட்டோட வளர்ச்சி வீழ்ச்சி!**

இப்போ ரத்து செய்துள்ளார்கள். அவருடைய ஈகோ சாட்டிஸ்ஃபை பண்றோம்ன்றதுக்காக இன்னும் ஒட்டுமொத்த தமிழ்நாட்டோட வளர்ச்சி வந்து விழுந்து போதுன்னா ரொம்ப கஷ்டமா இருக்கும்.

நான் ஒன்னு மட்டும் சொல்றேன். தயவு செஞ்சு முதலமைச்சர் இதைப் பார்த்துட்டு இருந்தாருன்னா, அவர் தயவு செஞ்சு புரிஞ்சுக்கணும். தொழில் வளர்ச்சியை நாங்க எந்தக் காலத்திலும் அரசியல் ஆக்க விரும்பவே இல்லை. இது தான் திராவிட நாயகன் மு.க. ஸ்டாலின் அவர்களின் நிலைப்பாடு. என்னோட தனிப்பட்ட நிலைப்பாடும் அதேதான். நான் ஆரம்பத்திலேயே இதான் சொல்லிட்டு இருக்கேன்.

இந்த திட்டத்தை உங்களால முடிஞ்சா, தயவு செஞ்சு எல்லா ஆபீசர்ஸையும் தனியா ஒன் டு ஒன் உட்கார வச்சு, அவங்களோட அவங்களோட ரிவ்யூ கேளுங்க. அப்ப உங்களுக்கு உண்மை தெரியும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டியளித்தார்.

### விஜய் சினிமாவில் அடிக்கும் பல்டியை விட இந்த பல்டி பலமாக இருக்கிறதே...

**தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!**




**தேர்தல் அறிக்கையில் சொன்னது ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருடத்திற்கு 6 எரிவாயு சிலிண்டர்கள் என – ஆனால் செய்தது ஆண்டிற்கு மூன்று விலையில்லா சிலிண்டர்கள் மட்டுமே அதுவும் ஆண்டு வருமானம் ரூபாய் 2.5 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள குடும்பத்திற்கு மட்டும். விஜய் சினிமாவில் அடிக்கும் பல்டியை விட இந்த பல்டி பலமாக இருக்கிறதே..**